# அவர் நமக்கு தீர்க்கதரிசிகளைக் கொடுத்தார்

## பாடம் 5

### தீர்க்கதரிசனத்தின் வரலாற்று பகுப்பாய்வு

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


**முன்னுரை** 1

**ஆரம்பகால ராஜ்யம்** 2

**முக்கிய நிகழ்வுகள்** 2

ஒன்றிணைந்த ராஜ்யம் 2

பிளவுபட்ட ராஜ்யம் 3

**தீர்க்கதரிசன ஊழியங்கள்** 3

உடன்படிக்கை இலட்சியங்கள் 4

பிளவுபட்ட ராஜ்யம் 4

**அசீரிய நியாயத்தீர்ப்பு** 5

**முக்கிய நிகழ்வுகள்** 5

சீரிய-இஸ்ரவேல் கூட்டணி 5

சமாரியாவின் வீழ்ச்சி 6

சனகெரிப்பின் படையெடுப்பு 6

**தீர்க்கதரிசன ஊழியங்கள்** 7

யோனா 7

ஓசியா 8

ஆமோஸ் 8

மீகா 9

நாகூம் 10

ஏசாயா 10

**பாபிலோனிய நியாயத்தீர்ப்பு** 11

**முக்கிய நிகழ்வுகள்** 12

முதல் படையெடுப்பு 12

இரண்டாவது படையெடுப்பு 13

மூன்றாவது படையெடுப்பு 13

**தீர்க்கதரிசன ஊழியங்கள்** 13

எரேமியா 14

செப்பனியா 14

யோவேல் 15

ஒபதியா 16

ஆபகூக் 16

எசேக்கியேல் 17

தானியேல் 18

**மறுசீரமைப்பு காலம்** 19





வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

**முக்கிய நிகழ்வுகள்** .......... 19
இஸ்ரவேல் மக்கள் தேசத்திற்குத் திரும்புதல் .......... 19
ஆலய புனரமைப்பு .......... 20
பரவலான விசுவாச துரோகம் .......... 20
**தீர்க்கதரிசன ஊழியங்கள்** .......... 20
ஆகாய் .......... 21
சகரியா .......... 21
மல்கியா .......... 22
**முடிவுரை** .......... **23**



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

சமீபத்தில் ஒரு நண்பர் எனக்கு ஒரு கதை சொன்னார். அவர் சில ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்து கொண்டார், அவரது மனைவி அவரது அலமாரிகளில் ஒன்றை சுத்தம் செய்து கொண்டிருந்தபோது, பழைய காதலியிடமிருந்து வந்த ஒரு கடிதத்தைக் கண்டார். முதலில் அவள் மிகவும் வருத்தப்பட்டாள், ஏனென்றால் கடிதம் சமீபத்தில் எழுதப்பட்டது என்று அவள் நினைத்தாள், ஆனால் கடிதம் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது என்பதை உறை மற்றும் உறையில் இருந்த தேதியைக்கொண்டு என் நண்பரால் நிரூபிக்க முடிந்தது. சரி, என் நண்பர் என்னைப் பார்த்து, "ரிச், உங்களுக்கு என்ன சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை, ஏனென்றால் அந்த கடிதம் எப்போது எழுதப்பட்டது என்பதை என்னால் நிரூபிக்க முடியாவிட்டால் என்ன நடந்திருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை." துரதிர்ஷ்டவசமாக, பல முறை கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தை தவறாகப் புரிந்துகொள்கிறார்கள், ஏனென்றால் தீர்க்கதரிசிகள் எப்போது பேசினார்கள் அல்லது தீர்க்கதரிசிகள் தங்கள் புத்தகங்களை எப்போது எழுதினார்கள் என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. நாம் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன புத்தகங்களை பொறுப்புடன் படிக்கப் போகிறோம் என்றால், அவர்கள் ஊழியம் செய்த காலங்களையும் நேரங்களையும் புரிந்துகொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும்.

இந்த பாடத்திற்கு "தீர்க்கதரிசனத்தின் வரலாற்று பகுப்பாய்வு" என்று தலைப்பிட்டுள்ளோம், மேலும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தை சரியாக புரிந்துகொள்வதற்கு பழைய ஏற்பாட்டு வரலாறு எவ்வாறு ஒரு அத்தியாவசிய சூழலை வழங்குகிறது என்பதை ஆராயப் போகிறோம். நமது வரலாற்று பகுப்பாய்வு தீர்க்கதரிசன வரலாற்றின் நான்கு முக்கிய காலகட்டங்களாகப் பிரிக்கப்படும்: முதலாவது, ஆரம்பகால ராஜ்யம்; இரண்டாவது, அசீரிய நியாயத்தீர்ப்புக் காலம்; மூன்றாவதாக, பாபிலோனிய நியாயத்தீர்ப்பின் காலம்; பின்னர் இறுதியாக, மறுசீரமைப்பு காலத்தைப் பார்க்கப் போகிறோம். முதலில் ஆரம்பகால ராஜ்யத்தைப் பற்றி பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# ஆரம்பகால ராஜ்யம்

இஸ்ரவேலில் அரசாட்சி முக்கியத்துவம் பெற்றபோது தீர்க்கதரிசனம் முக்கியத்துவம் பெற்றது என்று முந்தைய பாடத்தில் பார்த்தோம். எனவே இஸ்ரவேல் முதலில் ராஜாக்களை கொண்டிருந்த நாட்களாகிய ஆரம்பகால ராஜ்யத்தைப் பார்ப்பதன் மூலம் தீர்க்கதரிசனத்தைப் பற்றிய நமது வரலாற்று பகுப்பாய்வைத் தொடங்க இது நமக்கு உதவும். கி.மு 2000 இல் வாழ்ந்த ஆபிரகாம் காலம் முதல் சவுலின் காலம் வரை இஸ்ரவேலில் ராஜாக்கள் இல்லை. ஆனால் தாவீதின் ராஜ்யம் கி.மு 1000 இல் நிறுவப்பட்டது, அவரது ராஜ்யம் பல தலைமுறைகளாக அப்படியே இருந்தது. இஸ்ரவேலின் வரலாற்றின் இந்த காலகட்டத்தை நாம் ஆராயும்போது, இந்த காலகட்டத்தில் நடந்த முக்கிய நிகழ்வுகள் என்ன? இந்த நிகழ்வுகள் தீர்க்கதரிசன ஊழியங்களை எவ்வாறு வடிவமைத்தன? என்கிற இரண்டு முக்கியமான கேள்விகளைக் கேட்கப் போகிறோம்.

## முக்கிய நிகழ்வுகள்

ஆரம்பகால அரசாட்சியில் நடந்த இரண்டு முக்கிய நிகழ்வுகளை முதலில் பார்க்கலாம். முதலாவதாக, நாம் ஒன்றிணைந்த ராஜ்யத்தைப் பற்றிப் பேசலாம்.

### ஒன்றிணைந்த ராஜ்யம்

ஏறத்தாழ கி.மு.1000 இல், தாவீது எருசலேமில் அரியணை ஏறினார். அவர் எல்லா கோத்திரங்களையும் ஒன்றுபடுத்தினார், ராஜ்யத்திற்கு ஒப்பீட்டளவில் பாதுகாப்பான எல்லைகளை நிறுவினார், மேலும் தேவனுக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட தனது குமாரனை தயார்படுத்த தேவனுடைய பெட்டியை எருசலேமுக்குக் கொண்டு வந்தார். தாவீதின் குமாரனாகிய சாலொமோன் தன் தகப்பனின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினார். அவர் இஸ்ரவேலின் எல்லைகளை விரிவுபடுத்தினார், கோத்திரங்களை ஒற்றுமையாக வைத்திருந்தார். மேலும், சாலொமோன் ஒரு மகிமையான ஆலயத்தைக் கட்டி அதை கர்த்தரின் ஆராதனைக்காக அர்ப்பணித்தார். தாவீதும் சாலொமோனும் பரிபூரண ராஜாக்கள் அல்ல என்று சாமுவேல், இராஜாக்கள், நாளாகமம் ஆகிய புத்தகங்கள் தெளிவாக்குகின்றன. இருந்தாலும், வேதாகமம் இந்த காலகட்டத்தை ஒரு சிறந்த காலமாக பார்க்கிறது, அப்போது தேவனுடைய மக்கள் பல ஆசீர்வாதங்களைப் பெற்றனர்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## பிளவுபட்ட ராஜ்யம்

இந்த ஆரம்ப ஆண்டுகளில் நிலைமைகள் நன்றாக இருந்ததைப் போலவே, மற்றொரு முக்கிய சம்பவத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும், அது பிளவுபட்ட ராஜ்யம் ஆகும். துரதிர்ஷ்டவசமாக, சாலொமோனும் அவரது குமாரன் ரெகொபெயாமும் வடக்கு கோத்திரத்தாரை தகுதியான மரியாதையுடன் நடத்தவில்லை, எனவே வடக்கின் கோத்திரத்தார் பிரிந்து கி.மு 930 இல் தங்கள் சொந்த தேசத்தை உருவாக்கினர். இந்த நிகழ்வைப் பற்றி 1 இராஜாக்கள் 12 மற்றும் 2 நாளாகமம் 11 இல் நாம் அறிகிறோம். ரெகொபெயாம் வடக்கு கோத்திரத்தாரை நியாயமாக நடத்த மறுத்தபோது, அவர்கள் பிரிந்து சென்று தங்கள் சொந்த தேசத்தை உருவாக்கினர். முதலாம் யெரொபெயாம் வடக்கு கோத்திரங்களின் ராஜாவாகி, சமாரியாவில் ஒரு தலைநகரை அமைத்தான். அதோடு, தாண் மற்றும் பெத்தேலில் ஆராதனை மையங்களையும் அமைத்தார். யெரொபெயாம் தென்திசைக்கு எதிரான கலகத்தில் வெகுதூரம் சென்றுவிட்டார். தாணிலும் பெத்தேலிலும் இருந்த தன் ஆராதனை மையங்களில் சிலைகளை ஸ்தாபித்தார், இவ்வாறு செய்ததன் மூலம் வடக்கு ராஜ்யம் கடுமையாக சீர்கெட்டது. தேசம் கர்த்தருடைய விசுவாசத்திலிருந்து விலகி, தங்கள் உடன்படிக்கை பொறுப்புகளுக்கு அடிபணிய மறுத்தது. இந்த காலகட்டத்திலும் யூதா அதன் ஏற்ற தாழ்வுகளைக் கொண்டிருந்தது, ஆனால் பெரும்பாலும் அவர்கள் வடக்கு இஸ்ரவேலை விட மிகவும் உண்மையுள்ளவர்களாக இருந்தனர்.

எனவே ஆரம்பகால அரசாட்சியில் இரண்டு முக்கிய நிகழ்வுகளை நாம் கண்டோம்; அவையாவன: முதலாவது, மக்கள் பெரிதும் ஆசீர்வதிக்கப்பட்டதான தாவீது மற்றும் சாலமோனின் கீழ் இருந்த ஒன்றிணைந்த ராஜ்யம், பின்னர் ரெகொபெயாமின் நாட்களில் ராஜ்யத்தில் ஏற்பட்ட பிளவு.

ஆரம்பகால அரசாட்சியின் போது நடந்த இரண்டு முக்கிய நிகழ்வுகளை இப்போது நாம் பார்த்திருக்கிறோம், இந்த நிகழ்வுகள் தீர்க்கதரிசிகளின் ஊழியங்களை எவ்வாறு வடிவமைத்தன என்று நாம் கேட்க வேண்டும்.

# தீர்க்கதரிசன ஊழியங்கள்

பதினாறு வெவ்வேறு தீர்க்கதரிசிகள் உள்ளனர், அவர்களின் ஊழியங்கள் பழைய ஏற்பாட்டின் பெரிய மற்றும் சிறிய தீர்க்கதரிசன புத்தகங்களில் சுருக்கப்பட்டுள்ளன. ஆரம்ப கால அரசாட்சியின் காலம் தீர்க்கதரிசன நடவடிக்கைகள் நிறைந்ததாக இருந்தது என சாமுவேல், இராஜாக்கள், நாளாகமம் ஆகிய புத்தகங்கள் தெளிவுபடுத்துகின்றன. ஆனால் இந்தத் தீர்க்கதரிசன புத்தகங்களில் எதுவுமே அந்தக் காலப்பகுதியைச் சேர்ந்தவை அல்ல. நாம் படிக்கும் தீர்க்கதரிசிகளின் பின்னணியை வழங்குகிற



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆரம்பகால அரசாட்சியைப் பற்றி நாம் பேசலாம். இப்போது இந்த பின்னணியை நாம் குறைந்தது இரண்டு வழிகளில் காணலாம்.

## உடன்படிக்கை இலட்சியங்கள்

ஒருபுறம், பிற்காலத்தில் எழுதிய தீர்க்கதரிசிகள் முக்கியமான ராஜ உடன்படிக்கை இலட்சியங்களை நிறுவுவதாக ஒன்றிய ராஜ்யத்தின் நாட்களைத் திரும்பிப் பார்த்தனர். அவர்கள் தேவனுடைய ஜனங்களுக்கான தங்கள் நம்பிக்கைகள் அனைத்தையும் தேவன் தாவீதுடன் செய்து, சாலொமோனுடன் உறுதிப்படுத்திய உடன்படிக்கையின் அடிப்படையில் அமைத்தனர். தாவீது மற்றும் சாலொமோனின் நாட்களில் இருந்தது போல், இஸ்ரவேல் யூதாவுடன் மறுபடியும் இணைக்கப்படும் நாளுக்காக அவர்கள் ஏங்கினர். தாவீதின் சிங்காசனம் மறுபடியும் பாதுகாக்கப்பட்டு, தேசத்தின் எல்லைகள் மறுபடியும் விரிவாக்கப்படும் நாட்களுக்காக அவர்கள் ஆவலோடு காத்திருந்தனர். எனவே இந்த அர்த்தத்தில், ஒன்றிய ராஜ்யமானது பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளுக்கு ஒரு பின்னணியை வழங்குகிறது.

## பிளவுபட்ட ராஜ்யம்

மறுபட்சத்தில், எழுதிய தீர்க்கதரிசிகள் இரண்டு வெவ்வேறு தேசங்களை சேவித்தனர் என்ற உண்மைக்கு ராஜ்யத்தின் பிரிவினை ஒரு பின்னணியை அளித்தது. இந்த தேசங்கள் ஒப்பீட்டளவில் தனித்தனி வரலாறுகளைக் கொண்டிருந்தன. உடன்படிக்கை நியாயத்தீர்ப்பைப் பற்றி அச்சுறுத்தியும், மகா ஆரோக்கியம் மற்றும் ஆசீர்வாதத்தின் நாளை மக்களுக்கு உறுதியளித்தும் சில தீர்க்கதரிசிகள் வடக்கு ராஜ்யத்தில் தேவனை சேவித்தனர். வடக்கு கோத்திரங்களின் தலைநகரமான சமாரியாவில்தான் அவர்களுடைய கவனம் இருந்தது. மற்ற தீர்க்கதரிசிகள் யூதாவில் கர்த்தரை சேவித்தார்கள், அவர்கள் நியாயத்தீர்ப்புகளைப் பற்றி எச்சரித்து, தெற்கில் தேவனுடைய ஜனங்களுக்கு ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தமாக வழங்கினார்கள், ஆனால் அவர்கள் எருசலேம் மற்றும் யூதா கோத்திரத்தில் கவனம் செலுத்தினர்.

ஆரம்பகால அரசாட்சி காலத்திலிருந்து எழுதிய தீர்க்கதரிசிகள் யாரும் வரவில்லை என்றாலும், இந்த காலம் அனைத்து தீர்க்கதரிசிகளின் ஊழியங்களுக்கும் ஒரு அத்தியாவசிய பின்னணியை உருவாக்கியது என்பதை நாம் காண்கிறோம். ஆரம்பகால அரசாட்சியின் காலம் உடன்படிக்கையின் கொள்கைகளை நிறுவியது, மேலும் இது ஒரு வடக்கு மற்றும் தெற்கு ராஜ்யத்தின் யதார்த்தத்தையும் நிறுவியது.

இதுவரை நாம் ஆரம்பகால அரசாட்சியின் பின்னணியைப் பார்த்தோம். இப்போது நாம் தீர்க்கதரிசன வரலாற்றின் இரண்டாவது முக்கிய காலகட்டமான அசீரிய நியாயத்தீர்ப்பின் காலத்திற்கு செல்ல வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# அசீரிய நியாயத்தீர்ப்பு

நாம் முந்தைய பாடத்தில் பார்த்தபடி, உடன்படிக்கையின் மக்கள் கர்த்தருக்கு உண்மையாகவும் விசுவாசமாகவும் இருக்க வேண்டிய பொறுப்புகள் இருந்தன, மேலும் அவர்கள் இந்த உடன்படிக்கையை வெளிப்படையாக மீறியபோது, தேவன் போரில் நியாயத்தீர்ப்பை அனுப்பும் சூழ்நிலையில் தங்களைக் கண்டார்கள். தேவனுடைய மக்களுக்கு எதிராக தேவன் முதல் பெரிய யுத்தத்தை அனுப்பியது அசீரிய நியாயத்தீர்ப்பு காலமாகும். போரில் தோல்வியின் தெய்வீக நியாயத்தீர்ப்பு அசீரிய சாம்ராஜ்யத்தின் மூலம் தேவனுடைய மக்கள் மீது குறிப்பாக 734 முதல் 701 வரையிலான ஆண்டுகளில் வந்தது. கி.மு.8 மற்றும்7 ஆம் நூற்றாண்டுகளில், அசீரிய ராஜ்யம் வலிமை பெற்று பல நாடுகளை வென்றது. அதன் அதிகாரத்தின் உச்சத்தில், அசீரிய பேரரசு தற்கால துருக்கி முதல் பாரசீக வளைகுடா வரையிலும், தெற்கே எகிப்து வரையிலும் நீண்டிருந்தது. இஸ்ரவேலும் யூதாவும் இந்தப் பிரம்மாண்டமான, ஆக்கிரமிப்பு சாம்ராஜ்யத்தைக் கையாள்வதைத் தவிர்க்க முடியவில்லை. இந்த அசீரிய நியாயத்தீர்ப்பின் காலத்தை ஆராய, நாம் மீண்டும் இரண்டு விஷயங்களைப் பார்ப்போம்; அவையாவன: இந்த நேரத்தில் நடந்த முக்கிய நிகழ்வுகள் யாவை? இந்த நூற்றாண்டுகளில் நிகழ்ந்த இந்த நிகழ்வுகள் தீர்க்கதரிசிகளின் ஊழியங்களை எவ்வாறு பாதித்தன?

## முக்கிய நிகழ்வுகள்

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எழுத்துக்களில் தாக்கத்தை ஏற்படுத்திய அசீரிய ஆதிக்கத்தின் நூற்றாண்டுகளில் என்ன முக்கிய நிகழ்வுகள் நடந்தன? நமது ஆய்வுக்கு முக்கியமான குறைந்தது மூன்று முக்கிய வரலாற்று நிகழ்வுகள் நடந்தன: முதலாவது, சிரிய-இஸ்ரவேல் கூட்டணி; இரண்டாவது, சமாரியாவின் வீழ்ச்சி; மூன்றாவதாக, சனகெரிப்பின் படையெடுப்பு.

### சீரிய-இஸ்ரவேல் கூட்டணி

சிரிய-இஸ்ரவேல் கூட்டணியானது அந்த நேரத்தில் அசீரிய கட்டுப்பாட்டின் கீழ் இருந்த சிரியா, வடக்கு இஸ்ரவேல் மற்றும் யூதா ஆகிய மூன்று சிறிய நாடுகளிடையே மோதலை உள்ளடக்கியது. இந்த நிகழ்வுகளைப் பற்றி பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் நாம் வாசிக்கலாம், ஆனால் அதில் ஒரு சுவாரஸ்யமான பகுதி ஏசாயா 7 ஆகும். 734 ஆம் ஆண்டில், சிரியாவும் வடக்கு இஸ்ரவேலும் அசீரிய பேரரசுக்கு கப்பம் செலுத்துவதை விரும்பவில்லை, எனவே அசீரியர்களை எதிர்க்க ஒரு கூட்டணியை உருவாக்க



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முடிவு செய்தனர், ஏனெனில் அசீரியர்கள் தங்கள் பேரரசின் மற்ற பகுதிகளில் சிக்கலை அனுபவித்து வந்தனர். இஸ்ரவேலும் சிரியாவும் தங்கள் சொந்த கூட்டணியை உருவாக்கியதோடு மட்டுமல்லாமல், யூதாவை தங்கள் அணிகளில் சேருமாறு கட்டாயப்படுத்த முயன்றன. ஆனால் யூதாவின் ராஜாவாகிய ஆகாஸ் அவர்களோடு சேர மறுத்து, அசீரியாவின் உதவியை நாடினான். இந்த நிகழ்வுகள் தேவனுடைய மக்களுக்கு பல விளைவுகளை ஏற்படுத்தின, ஆனால் அந்த முக்கிய விளைவுகளில் ஒன்றையாவது நாம் அறிந்திருக்க வேண்டும். வடக்கும் தெற்கும் அசீரியாவுடன் மோதல் பாதையில் இருந்தன. வடக்கு இஸ்ரவேல் அசீரியாவுக்கு எதிராகக் கலகம் செய்ததால், அசீரிய அரசர்கள் வந்து வடக்கு இஸ்ரவேலை தாக்கி அழித்தனர். யூதா சிறிது காலம் அசீரியாவுடன் இணைந்திருந்தது, எனவே அது அசீரிய பேரரசுக்கு பெரும் கப்பம் மற்றும் பெரும் வரிகளைக் கட்டவேண்டியிருந்தது. எனினும், இறுதியில், யூதாவும் அசீரியாவுக்கு எதிராகக் கலகம் செய்தது, தென்புற யூதாவுக்கும் எதிராக நியாயத்தீர்ப்பு வரவிருந்தது.

## சமாரியாவின் வீழ்ச்சி

அசீரிய நியாயத்தீர்ப்பு காலத்தின் இரண்டாவது முக்கிய நிகழ்வு சமாரியாவின் வீழ்ச்சியாகும். சமாரியா வடக்கு இஸ்ரவேலின் தலைநகராக இருந்தது, சிரிய-இஸ்ரவேல் கூட்டணியின் கலகத்தின் காரணமாக அசீரியர்களின் பழிவாங்கும் பொருளாக ஆனது. இந்த நிகழ்வைப் பற்றி 2 இராஜாக்கள் 17 இல் வாசிக்கிறோம். மாபெரும் அசீரிய படை வடக்கு இஸ்ரவேலுக்கு எதிராக அணிவகுத்து சமாரியாவை அழித்தது, அசீரியர்கள் வடக்கு இஸ்ரவேலர் பலரை நாடுகடத்தினர். இந்த நிகழ்வு தேவனுடைய மக்களுக்கு ஒரு புதிய நாளைக் குறித்தது, ஆனால் பெரிய அளவிலான நாடுகடத்தலில் உடன்படிக்கை நியாயத்தீர்ப்பின் உச்சக்கட்டம் உண்மையில் அசீரியர்களின் கைகளில் வடக்கு இஸ்ரவேலின் அழிவுடன் முதல் முறையாக நடந்தது.

## சனகெரிப்பின் படையெடுப்பு

அசீரிய நியாயத்தீர்ப்பின் மூன்றாவது முக்கிய நிகழ்வு யூதாவின் மீதான சனகெரிப்பின் படையெடுப்பில் நடந்தது. யூதா வட ராஜ்யத்திலிருந்து தங்களை தங்களைக் காத்துக்கொள்ள அசீரியாவுக்கு அடிபணிந்ததால், அசீரியாவின் கோபத்திலிருந்து சிறிது காலம் தப்பியது. ஆனால் பிற்பாடு, யூதாவும்கூட இறுதியில் அசீரியாவுக்கு எதிராக கலகம் செய்தனர், மேலும் அவர்கள் இந்த மாபெரும் சாம்ராஜ்யத்தின் கோபத்திற்கு ஆளானார்கள். யூதாவுக்கு எதிராக பல தாக்குதல்கள் வந்தன, ஆனால் கி.மு 701 வாக்கில் வந்த சனகெரிப்பின் படையெடுப்பு தான் மிக மோசமானது. இந்த நிகழ்வைப் பற்றி 2 இராஜாக்கள் 18–19 இல் வாசிக்கிறோம். அசீரியர்கள் பல யூத நகரங்களை அழித்துவிட்டு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எருசலேம் வரை வந்தனர். யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா உதவிக்காக கர்த்தரிடம் திரும்பி, அற்புதமாக விடுவிக்கப்படும் வரை எல்லாம் இழந்துவிட்டதாகத் தோன்றியது. யூதா அசீரியாவின் சேவை அரசாக இருந்தது, ஆனால் எசேக்கியா மற்றும் சனகெரிப்பின் படையெடுப்பின் நாட்களில் முழு அழிவையும் யூதா தவிர்த்தது.

எனவே அசீரிய நியாயத்தீர்ப்பின் போது மூன்று முக்கிய நிகழ்வுகள் இருந்தன என்பதை நாம் காணலாம்; அவையாவன: முதலாவது, 734 இல் சிரிய-இஸ்ரவேல் கூட்டணி; இரண்டாவதாக, கி.மு 722 இல் சமாரியாவின் அழிவு; இறுதியாக, 701 இன் சனகெரிப்பின் படையெடுப்பு.

அசீரிய நியாயத்தீர்ப்பின் போது நடந்த பல முக்கிய நிகழ்வுகளை நாம் பார்த்திருக்கிறோம், இந்த மூன்று நிகழ்வுகளும் தீர்க்கதரிசிகளின் ஊழியங்களை எவ்வாறு பாதித்தன என்பதை நாம் ஆராய வேண்டும்.

## தீர்க்கதரிசன ஊழியங்கள்

அசீரிய நியாயத்தீர்ப்பு தீர்க்கதரிசிகளின் ஊழியங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பழைய ஏற்பாட்டில் நம்மிடம் உள்ள பதினாறு புத்தகங்களில், ஆறு புத்தகங்கள் இந்த காலகட்டத்தில் கர்த்தரின் தூதுவர்களின் ஊழியங்களை அறிவிக்கின்றன; அவையாவன: யோனா, ஓசியா, ஆமோஸ், மீகா, நாகூம் மற்றும் ஏசாயா. இந்த தீர்க்கதரிசிகள் அனைவரும் அசீரிய நியாயத்தீர்ப்பு காலத்தில் ஊழியம் செய்தனர். அசீரிய நியாயத்தீர்ப்பைக் குறித்து இந்த தீர்க்கதரிசிகள் என்ன சொன்னார்கள் என்பதை சுருக்கமாக பார்ப்போம்.

### யோனா

முதலாவதாக, தீர்க்கதரிசி யோனாவைப் பற்றி நாம் குறிப்பிட வேண்டும். 2 இராஜாக்கள் 14:25 இன் படி, வட இஸ்ரவேலில் கி.மு 793-753 வரை ராஜாவாக இருந்த இரண்டாம் யெரொபெயாமின் காலத்தில் தேவன் யோனாவை தீர்க்கதரிசனம் உரைக்க அழைத்தார். அசீரியாவின் தலைநகரான நினிவேக்கு செல்லும்படி தேவன் யோனாவை அழைத்ததால், இந்த ஊழியம் தீர்க்கதரிசிகளிடையே தனித்துவமானது. அவர் அசீரியர்களின் இந்த தலைநகரத்திற்குச் சென்று கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கித்தார், அவருடைய மைய செய்தி எளிமையானது, நாம் யோனா 3: 4 இல் இவ்வாறு வாசிக்கிறோம்:

> இன்னும் நாற்பதுநாள் உண்டு; அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் (யோனா 3:4).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

யோனாவுக்கு மிகவும் வருத்தமளிக்கும் வகையில், நினிவே நகரத்தார் கர்த்தரிடமிருந்து இந்த வார்த்தையைக் கேட்டபோது மனந்திரும்பினார்கள், மேலும் நகரத்திற்கு எதிராக அவர் அச்சுறுத்திய பேரழிவை தேவன் கொண்டு வரவில்லை. யோனாவின் ஊழியமானது, அசீரிய சாம்ராஜ்யத்தைப் போன்ற ஒரு பொல்லாத சாம்ராஜ்யத்துக்குங்கூட தேவனுடைய இரக்கம் நீட்டிக்கப்பட்டிருப்பதைக் குறிக்கிறது.

## ஓசியா

அசீரிய நியாயத்தீர்ப்பின் போது ஊழியம் செய்த இரண்டாவது தீர்க்கதரிசி ஓசியா ஆவார். யூதாவின் ராஜாக்களாகிய உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா ஆகியோரின் நாட்களில் ஓசியா ஊழியம் செய்தார் என்று ஓசியா 1:1 கூறுகிறது. உசியா கடைசியாக ஆண்டது ஏறக்குறைய கி.மு 740 ஆகும், எசேக்கியா ஆட்சி செய்த முதல் ஆண்டு ஏறக்குறைய கி.மு 716 ஆகும். இந்த வரம்பு ஓசியா தீர்க்கதரிசியின் ஊழியத்திற்கு ஒரு நீண்ட காலத்தை நிறுவுகிறது. அவர் முதன்மையாக வடக்கு இஸ்ரவேலில் கி.மு 750 முதல் குறைந்தபட்சம் கி.மு 722 இல் சமாரியாவின் வீழ்ச்சி வரை ஊழியம் செய்தார். அந்த நேரத்தில் ஓசியா ஒருவேளை தெற்கு நோக்கி குடிபெயர்ந்திருக்கலாம். ஆகவே, சிரிய-இஸ்ரவேல் கூட்டணிக்கு முன்பாக ஓசியா செழிப்பான நாட்களில் தீர்க்கதரிசனம் உரைத்தார் என்பதை நாம் காணலாம், மேலும் அவர் சமாரியாவின் வீழ்ச்சியின் காலம் வரை தீர்க்கதரிசனம் உரைத்தார்.

ஓசியாவின் தீர்க்கதரிசனங்களைப் பார்க்கும்போது, அவர் வடக்கு இஸ்ரவேலில் ஊழியம் செய்தார் என்பதை வெளிப்படுத்துகிறது. அவரது பெரும்பாலான தீர்க்கதரிசனங்கள் வடக்கில் ஊழல் மற்றும் தீமைக்கு எதிரான எச்சரிக்கைகளைக் கொண்டுள்ளன. வடக்கு ராஜ்யம் பாவத்தால் மிகவும் சிதைக்கப்பட்டிருந்தது, இஸ்ரவேலையும் சமாரியாவையும் அழிக்க அசீரியர்களைக் கொண்டு வருவதன் மூலம் தேவன் அவர்களை நியாயந்தீர்க்கப் போகிறார் என்பது தான் ஓசியாவின் மைய செய்தியாகும். இந்த முன்னறிவிப்பு, நிச்சயமாக, சமாரியாவின் வீழ்ச்சியுடன் நிறைவேறியது. இருப்பினும், ஓசியா நம்பிக்கை அளித்தார். நாடுகடத்தப்பட்ட பிறகும்கூட, மறுசீரமைப்பின் உடன்படிக்கை ஆசீர்வாதம் ஒரு நாள் வரும் என்று அவர் சொன்னார்.

## ஆமோஸ்

அசீரிய நியாயத்தீர்ப்பில் கவனம் செலுத்திய மூன்றாவது தீர்க்கதரிசி ஆமோஸ் ஆவார். உசியா யூதாவின் ராஜாவாகவும், யெரொபெயாம் இஸ்ரவேலின் ராஜாவாகவும் இருந்தபோது ஆமோஸ் ஊழியம் செய்ததாக ஆமோஸ் 1:1 கூறுகிறது. இந்த வசனம் ஏறக்குறைய கி.மு 760 முதல் 750 வரை ஆமோஸின் ஊழியத்திற்கான பலவிதமான தேதிகளை நமக்குத் தருகிறது. 734



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இல் சிரிய-இஸ்ரவேல் கூட்டணியின் தேதிகளுக்கு முன்னர் ஆமோஸ் பணியாற்றினார். இரண்டாம் யெரொபெயாமின் கீழ் வடக்கு இஸ்ரவேல் செழிப்பாக இருந்த காலகட்டத்தில் அவர் பணியாற்றினார். ஓசியாவைப் போலவே, ஆமோஸும் வடக்கு இஸ்ரவேலில் ஊழியம் செய்தார். அசீரிய நியாயத்தீர்ப்பு வரப்போகிறது என்றும், சமாரியா வீழ்ச்சியடையும் என்றும், நாடுகடத்தப்படப் போகிறது என்றும் அவர் தனது நாளின் தலைமுறையை எச்சரித்தார். அவருடைய முக்கிய செய்தி இதுதான். ஆமோஸ் 5:27 இல் ஆமோஸ் இஸ்ரவேலருக்கு இவ்வாறு கூறுகிறார்:

> "ஆகையால் உங்களைத் தமஸ்குவுக்கு அப்பாலே குடியோட்டுவேன் என்று சேனைகளுடைய தேவன் என்னும் நாமமுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" (ஆமோஸ் 5:27).

நாடுகடத்தப்பட்டது இஸ்ரவேலின் முடிவு அல்ல என்ற நம்பிக்கையை ஆமோஸ் தனது புத்தகத்தின் கடைசி அதிகாரத்தில் மீண்டும் வலியுறுத்துகிறார். சிறையிருப்புக்குப் பிறகு திரும்ப நிலைநாட்டப்படுவதற்கான உடன்படிக்கை ஆசீர்வாதம் மோசேயினால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது, ஆமோஸும் அதை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

## மீகா

அசீரிய நியாயத்தீர்ப்பை விசாரித்த நான்காவது தீர்க்கதரிசி மீகா ஆவார். யூதாவின் ராஜாக்களாகிய யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்பவர்களின் நாட்களில், சமாரியாவுக்கும் எருசலேமுக்கும் ஊழியஞ்செய்ததாக மீகா 1:1 கூறுகிறது. யோதாமின் ஆட்சியின் கடைசி ஆண்டான கி.மு 735 முதல் சனகெரிப்பின் படையெடுப்பு நடந்த நாளான 701 வரை மீகா தேவனுடைய தீர்க்கதரிசியாக ஊழியம் செய்தார். ஓசியாவையும் ஆமோஸையும் போல் மீகா யூதாவில், குறிப்பாக எருசலேமுக்குப் பக்கத்தில் ஊழியம் செய்தார். எளிமையாகச் சொன்னால், தேவன் சமாரியாவையும், எருசலேமையும் அசீரியர்களின் கைகளால் நியாயந்தீர்க்கப் போகிறார் என்பதே மீகாவின் செய்தியாகும். சமாரியா அழிவிலிருந்து தப்பிக்கும் என்று அவர் சிறிதும் நம்பவில்லை. எருசலேம் அழிக்கப்படும் என்றும் எச்சரித்தார். சனகெரிப் படையெடுத்தபோது, எதிரிகளால் எருசலேமை அழிக்கவே முடியாது என்று சொன்ன பொய்த் தீர்க்கதரிசிகளை மீகா எதிர்த்தார். மனந்திரும்புதல் நடைபெறாவிட்டால் எருசலேம் அழிக்கப்படும் என்று அவர் வாதிட்டார். அப்படியிருந்தும், நாடுகடத்தப்பட்டாலும், ஒரு நாள் தேவன் அதன் எதிரிகளுக்கு எதிராக பதிலடி கொடுப்பார் என்றும், அசீரியர்களின் ஒடுக்குமுறையிலிருந்து தம்முடைய மக்களை விடுவிப்பார் என்றும், மக்களை மீண்டும் ஒன்றிணைக்கவும், தேசத்தில் உடன்படிக்கை ஆசீர்வாதங்களை மீட்டெடுக்கவும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஒரு பெரிய ராஜாவை கொண்டு வருவார் என்றும் மீகா இஸ்ரவேலுக்கும் யூதாவுக்கும் நம்பிக்கையூட்டினார்.

## நாகூம்

அசீரிய நியாயத்தீர்ப்பின் போது ஊழியம் செய்த இரண்டாவது தீர்க்கதரிசி ஒசியா ஆவார். நாகூம் ஊழியம் செய்த காலம் அவருடைய புத்தகத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை, ஆனால் அவருடைய புத்தகத்திலுள்ள பொருட்களிலிருந்து அதை ஊகிக்க முடிகிறது. இவரது ஊழியம் கி.மு 663 முதல் கி.மு 612 வரை நடந்தது. அவரது புத்தகத்தில் இரண்டு வசனங்கள் சாத்தியக்கூறுகளின் வீச்சை நிறுவுகின்றன. 3:8 இல் எகிப்திய நகரமான நோ அம்மோன் ஏற்கனவே அசீரியர்களால் கைப்பற்றப்பட்டிருந்தது என்றும், இந்த நிகழ்வு கி.மு 663 இல் நடந்தது என்றும் நாம் காண்கிறோம். ஆயினும் தீர்க்கதரிசி அசீரிய தலைநகரான நினிவேயின் அழிவையும் முன்னறிவிக்கிறார், மேலும் அவர் அதை எதிர்கால நிகழ்வாக 3:7 இல் பேசுகிறார். நினிவேயின் அழிவு கி.மு 612 இல் நடந்தது, ஆகவே அந்த பெரிய நிகழ்வுக்கு முன்பே அவருடைய ஊழியம் நடந்தது என நாம் அறிவோம்.

நாகூம் யூதாவை நோக்கி பேசியதாக 1:15 இல் வாசிக்கிறோம், எனவே அவர் யூதாவில் ஊழியம் செய்தார் என்று நாம் நம்பலாம், ஆனால் நாகூம் தனது கவனத்தை யூதாவின் மீது அல்ல, ஆனால் அசீரியாவின் மீது செலுத்துகிறார். இந்தச் சமயத்தில் இஸ்ரவேலும் யூதாவும் அசீரியாவின் கைகளில் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தன, இந்த துன்பத்தின் மத்தியில், தேவன் அசீரியாவை அழிக்கப் போகிறார் என்கிற ஒரு முக்கிய செய்தி நாகூமுக்கு இருந்தது. நினிவேயின் தலைநகரை அழிப்பதன் மூலம் தேவன் அசீரியாவை தண்டிப்பார் என்று அவர் யூதாவுக்கு உறுதியளிக்கிறார். 3:5-7 இல் நாம் வாசிக்கிறபடி, கர்த்தர் இந்த வார்த்தைகளைக் கூறுகிறார்:

> இதோ, நான் உனக்கு விரோதமாக வந்து உன் வஸ்திரத்து ஓரங்களை உன் முகமட்டும் தூக்கியெடுத்து, ஜாதிகளுக்கு உன் நிர்வாணத்தையும், ராஜ்யங்களுக்கு உன் மானத்தையும் தெரியப்பண்ணி, அப்பொழுது உன்னைக் காண்கிறவனெல்லாம் நினிவே பாழாய்ப்போயிற்று, உன்னைவிட்டோடிப்போவான் (நாகூம் 3:5-7).

## ஏசாயா

அசீரிய நியாயத்தீர்ப்பில் கவனம் செலுத்திய மூன்றாவது தீர்க்கதரிசி ஏசாயா ஆவார். யூதாவின் ராஜாக்களான உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் ஏசாயா ஊழியம் செய்ததாக ஏசாயா 1:1 குறிப்பிடுகிறது. ஏறக்குறைய கி.மு 740 முதல் சனகெரிப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

படையெடுப்பான கி.மு 701 வரை ஏசாயா ஊழியம் செய்தார் என்று இந்த ராஜாக்களின் பதிவு நமக்குச் சொல்கிறது. சீரிய-இஸ்ரவேலர் கூட்டணி, சமாரியாவின் வீழ்ச்சி மற்றும் சனகெரிப் படையெடுப்பு ஆகியவற்றின் போது ஏசாயா ஊழியம் செய்தார் என்பதை நாம் காணலாம். ஏசாயாவின் புத்தகத்தின் பொருளடக்கம் அவர் யூதாவில், குறிப்பாக எருசலேமில் ஊழியம் செய்தார் என்பதை வெளிப்படுத்துகிறது. அசீரிய நியாயத்தீர்ப்பு காலத்தில் ஏசாயா யூதாவை பல வழிகளில் கையாண்டார். சிரிய-இஸ்ரவேல் கூட்டணியின் போது கர்த்தர் மீது விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வைக்க அவர் அழைப்பு விடுத்தார். சனகெரிப் படையெடுப்பின் போது, எருசலேமின் விடுதலைக்காக எசேக்கியா ராஜா கர்த்தரை நம்பும்படி ஏசாயா வழிநடத்தினார். யூதா அசீரிய நியாயத்தீர்ப்புகளை எதிர்கொண்டதால் கர்த்தரை நம்ப வேண்டும் என்பது தான் அவரது ஊழியத்தின் இந்த பகுதிகளுக்கு ஒரு முக்கிய செய்தியாக இருந்தது. இஸ்ரவேலர்கள் யெகோவாவை நம்பாதபோது, யூதா சிறைப்படும் என்கிற எச்சரிக்கை இஸ்ரவேலருக்கு இருந்தது. ஆயினும் மற்ற பல தீர்க்கதரிசிகளைப் போலவே, யூதாவின் மறுசீரமைப்பு நாடுகடத்தப்பட்ட பிறகு நடைபெறும் என்று ஏசாயா உறுதிப்படுத்தினார்.

எனவே அசீரிய நியாயத்தீர்ப்பின் காலம் தீர்க்கதரிசிகளின் ஊழியங்களுக்கு குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்திய பல முக்கிய நிகழ்வுகளைக் கொண்டிருந்தது என்று பார்த்தோம். இது தேவனுடைய மக்களுக்கு மிகுந்த துயரமும் கஷ்டமும் நிறைந்த காலமாக இருக்கப்போகிறது என்பதை தீர்க்கதரிசிகள் அறிந்திருந்தனர். அவர்கள் நியாயத்தீர்ப்புகளின் வார்த்தைகளுடன் ஒரு பிரகாசமான நாள் அடிவானத்தில் உள்ளது என்று ஊக்கமளிக்கும் வார்த்தைகளுடனும் வந்தனர்.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் அசீரிய நியாயத்தீர்ப்பு காலத்தில் எவ்வாறு ஊழியம் செய்தனர் என்பதை இப்போது நாம் ஆராய்ந்தோம், இப்போது நாம் பாபிலோனிய நியாயத்தீர்ப்பு காலத்திற்கு திரும்புவோம்.

## பாபிலோனிய நியாயத்தீர்ப்பு

பழைய ஏற்பாட்டின் அனைத்து எழுதிய தீர்க்கதரிசிகளுக்கும் ஆரம்பகால அரசாட்சி ஒரு பின்னணியை உருவாக்கியது என்பதை இதுவரை நாம் பார்த்தோம். கி.மு 734 முதல் 701 வரையிலான அசீரிய நியாயத்தீர்ப்பு யோனா, ஒசியா, ஆமோஸ், மீகா, நாகூம் மற்றும் ஏசாயா ஆகியோர் ஊழியம் செய்த வரலாற்று சூழலை உருவாக்கியது என்றும் பார்த்தோம். நாம் தீர்க்கதரிசன ஊழியத்தின் மூன்றாவது பெரிய காலப்பகுதியாகிய பாபிலோனிய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நியாயத்தீர்ப்புக்கு வருகிறோம். இந்த நியாயத்தீர்ப்பு காலம் கி.மு 605 முதல் கி.மு 539 வரை நீடித்தது.

பல வழிகளில், ஏசாயா தீர்க்கதரிசி அசீரிய நியாயத்தீர்ப்பின் காலத்திற்கும் பாபிலோனிய நியாயத்தீர்ப்பின் காலத்திற்கும் இடையில் ஒரு கீலை உருவாக்குகிறார். சனகெரிப் படையெடுத்த நாட்களில் ஏசாயா எசேக்கியாவுக்கு ஊழியம் செய்தார் என்று நாம் ஏற்கெனவே பார்த்தோம். இந்தப் படையெடுப்பு முடிந்த பிறகு, எசேக்கியா பாபிலோனியர்களோடு கூட்டணி வைத்து மேற்கொண்டு வரும் தாக்குதல்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முயன்றார். ஏசாயா 39-ஆம் அதிகாரத்தில், எசேக்கியா செய்ததை தீர்க்கதரிசி கண்டுபிடிக்கிறார். எனவே அவர் 39:5-7 இல் இந்த வார்த்தைகளைக் கூறுகிறார்:

> அப்பொழுது ஏசாயா எசேக்கியாவை நோக்கி: சேனைகளுடைய கர்த்தரின் வார்த்தையைக் கேளும். இதோ, நாட்கள் வரும்; அப்பொழுது உன் வீட்டில் உள்ளதிலும், உன் பிதாக்கள் இந்நாள்வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாய் வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படும். நீ பெறப்போகிற உன் சந்ததியாகிய உன் குமாரரிலும் சிலர் பாபிலோன் ராஜாவின் அரமனையிலே அரமனை வேலைக்காரராயிருப்பார்கள் (ஏசாயா 39:5-7).

மீண்டும் நமது விவாதத்தை இரண்டு வகைகளாகப் பிரிப்போம்: முதலாவதாக, பாபிலோனிய நியாயத்தீர்ப்பின் முக்கிய நிகழ்வுகள் என்ன? என்றும் இரண்டாவதாக, இந்த நேரத்தில் தீர்க்கதரிசிகள் எவ்வாறு ஊழியம் செய்தார்கள்? என்றும் பார்க்கலாம். பாபிலோனிய நியாயத்தீர்ப்பை உள்ளடக்கிய முக்கிய நிகழ்வுகளை முதலில் பார்ப்போம்.

## முக்கிய நிகழ்வுகள்

இந்த காலகட்டத்தை புரிந்து கொள்ள கி.மு 605 இன் முதல் பாபிலோனிய படையெடுப்பு, கி.மு 597 இன் இரண்டாவது படையெடுப்பு, மற்றும் கி.மு 586 இன் மூன்றாவது படையெடுப்பு ஆகிய மூன்று முக்கிய நிகழ்வுகளை நாம் அடையாளம் காண வேண்டும்.

### முதல் படையெடுப்பு

முதலாவதாக, கி.மு 605 இல், யூத தலைவர்களின் முதல் படையெடுப்பு நடந்தது. அதில் யூதா பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்டது. யோயாக்கீம் ராஜா பாபிலோனிய அரசனான நேபுகாத்நேச்சாருக்கு உண்மையற்றவராக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இருந்தார். ஆகவே நேபுகாத்நேச்சார் யூதாவின்மீது படையெடுத்து எருசலேமிலிருந்த தலைவர்கள் பலரை அழித்துப்போட்டார். அந்தச் சமயத்தில் நாடுகடத்தப்பட்டவர்களில் தீர்க்கதரிசியாகிய தானியேலும் அவருடைய நண்பர்களான சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவும் அடங்குவர்.

## இரண்டாவது படையெடுப்பு

இந்த காலகட்டத்தின் இரண்டாவது முக்கிய நிகழ்வு கி.மு 597 இல் நடந்தது. யூதாவில் தொடர்ந்த கலகத்திற்கு பதிலடியாக நேபுகாத்நேச்சார் இரண்டாவது படையெடுத்து அவர்களை நாடு கடத்தினார். இந்தச் சமயத்தில், யூதாவின் பெரும்பகுதியை அவர் அழித்தார். ஏராளமான ஜனங்களை பாபிலோனுக்கு நாடுகடத்தினார். இந்த நாடுகடத்தலில் எசேக்கியேல் தீர்க்கதரிசி அழைத்துச் செல்லப்பட்டார். இந்த இரண்டாவது படையெடுப்பு யூதா தேசத்தை பல வழிகளில் காயப்படுத்தியது, ஆனால் அந்த ஜனம் அதன் தீய வழிகளை விட்டு இன்னும் மனந்திரும்பவில்லை.

## மூன்றாவது படையெடுப்பு

பாபிலோனிய காலத்தின் மூன்றாவது முக்கிய நிகழ்வு கி.மு 586 இல் நடந்தது. நேபுகாத்நேச்சார் யூதாவில் தொடர்ந்து கலகம் செய்தது போதுமானதாக இருந்தது, அவர் மூன்றாவதும் இறுதியாக படையெடுத்து நாடுகடத்தினார். இந்த முறை, பாபிலோனியர்கள் எருசலேமையும் அதன் பரிசுத்த ஆலயத்தையும் முற்றிலுமாக அழித்தனர். யூதாவிலிருந்த மிகப் பெரும்பான்மையான ஜனங்கள் நாடுகடத்தப்பட்டனர், தேசம் பாழாக்கப்பட்டது, யூதாவும் நாடுகடத்தப்பட்டது.

பாபிலோனிய நியாயத்தீர்ப்பின் போது இந்த மூன்று முக்கிய நிகழ்வுகளை நாம் சிந்திக்கும்போது, இது தேவனுடைய மக்களுக்கு முற்றிலும் அழிவின் காலமாக இருந்தது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தாவீதின் குமாரன் நாடுகடத்தப்பட்டார், எருசலேமின் ஆலயம் அழிக்கப்பட்டது. தேவனுடைய ஜனங்களின் சரித்திரத்தில் அது ஒரு பயங்கரமான காலமாகும்.

பாபிலோனிய கால முக்கிய நிகழ்வுகளை நாம் பார்த்த பிறகு, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் இக்காலத்தில் ஊழியம் செய்த வழிகளை நாம் சிந்திக்க வேண்டும்.

# தீர்க்கதரிசன ஊழியங்கள்

பாபிலோனிய நியாயத்தீர்ப்பு பல பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளுக்கு ஒரு வரலாற்று சூழலை வழங்குகிறது. ஏழு தீர்க்கதரிசிகள் இந்த நேரத்தில் யெகோவாவின் தூதுவர்களாக பணியாற்றினர்: எரேமியா, செப்பனியா, யோவேல், ஒபதியா, ஆபகூக், எசேக்கியேல் மற்றும் தானியேல்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## எரேமியா

பாபிலோனிய காலத்தின் முதல் தீர்க்கதரிசி எரேமியா ஆவார். எரேமியா யூதாவில் மூன்று படையெடுப்புகள் மற்றும் நாடுகடத்தல்கள் முழுவதும் தேவனுடைய தீர்க்கதரிசியாக பணியாற்றினார். எரேமியா 1:2-3 இல் நாம் வாசிக்கிறபடி, எரேமியா ஊழியம் செய்தார்.

> … யோசியா என்கிற யூதாவுடைய ராஜாவின் நாட்களில், யோசியாவின் குமாரனாகிய சிதேக்கியா என்கிற யூதாவுடைய ராஜாவின் பதினோராம் வருஷத்து முடிவுமட்டாகவும், எருசலேம் ஊரார் ஐந்தாம் மாதத்தில் சிறைப்பட்டுப்போகும் வரைக்கும் கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று(எரேமியா 1:2-3).

பாபிலோனியர்கள் அசீரியர்களை தோற்கடிப்பதற்கு முன்பே, ஏறக்குறைய கி.மு 626 முதல் எரேமியா சேவை செய்தார் என்பதையும், இறுதி பாபிலோனிய படையெடுப்பு மற்றும் நாடுகடத்தல் நடந்த 586 க்குப் பிறகு அவர் தொடர்ந்து யெகோவாவின் தூதராக பணியாற்றினார் என்பதையும் இந்த வசனங்களிலிருந்து நாம் காண்கிறோம்.

பாபிலோனியர்கள் முதன்முதலில் படையெடுப்பதற்கு முன்பு, படையெடுப்புகளை முன்கூட்டியே தடுக்க உண்மையான மனந்திரும்புதலை எரேமியா அழைத்தார். அலையலையாகத் தாக்குதல்கள் தொடர்ந்தபோது, எருசலேமுக்கு அழிவு நிச்சயம் என்பதை எரேமியா புரிந்துகொண்டார். மக்கள் மனந்திரும்பவும், பல ஆண்டு கஷ்டங்களுக்கு தயாராகவும் அவர் அழைப்பு விடுத்தார். பாபிலோனிய நாடுகடத்தலில் எரேமியா கவனம் செலுத்தியபோதிலும், எதிர்காலத்தில் என்றாவது ஒரு நாள் இஸ்ரவேல் திரும்ப நிலைநாட்டப்படும் என்றும் உறுதியளித்தார். உதாரணமாக, எரேமியா தனது புத்தகத்தின் 30-31 அதிகாரங்களில், தேவன் அவர்களை தேசத்திற்கு மீண்டும் கொண்டு வந்து ஒரு புதிய உடன்படிக்கையின் கீழ் பாதுகாப்பாக நிலைநிறுத்துவார் என்று யூதா மக்களுக்கு நினைவூட்டினார்.

## செப்பனியா

பாபிலோனிய நியாயத்தீர்ப்பின் இரண்டாவது தீர்க்கதரிசி செப்பனியா ஆவார். செப்பனியா 1:1 அவர் தேவனுடைய தீர்க்கதரிசியாக பணியாற்றியதை வெளிப்படையாக நமக்குக் கூறுகிறது. இவர் யூதாவின் ராஜாவான ஆமோனின் குமாரன் யோசியாவின் காலத்தில் பணியாற்றினார். ஏறக்குறைய கி.மு 640 முதல் கி.மு 609 வரை யோசியா யூதாவை ஆட்சி செய்தார், இது செப்பனியாவை எரேமியாவின் ஆரம்பகால ஊழியத்தின் சமகாலத்தவராக ஆக்குகிறது. 2:13-15 இல், நினிவே பாபிலோனியர்களிடம் வீழ்ச்சியடைந்ததைப் போலவே



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நினிவேயும் விழும் என்று செப்பனியா முன்னறிவித்தார். உண்மையில், தேவனுடைய ஜனங்களைத் துன்புறுத்திய அசீரியாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் எதிராக கர்த்தருடைய நாள் வரும் என்று செப்பனியா முன்னறிவித்தார். யூதா உட்பட அந்தப் பகுதி முழுவதிலும் பாபிலோனியர்கள் ஆதிக்கம் செலுத்துவார்கள் என்று அவர் எதிர்பார்த்தார். அப்படியிருந்தும், இஸ்ரவேலும் யூதாவும் மகிமையாக மீட்டெடுக்கப்படும் நாள் வரும் என்றும் செப்பனியா அறிவித்தார். 3:20 இல் அவர் இவ்வாறு கூறுகிறார்:

> அக்காலத்திலே உங்களைக் கூட்டிக்கொண்டுவருவேன், அக்காலத்திலே உங்களைச் சேர்த்துக்கொள்வேன்; உங்கள் கண்காண நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பும்போது, பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (செப்பனியா 3:20).

## யோவேல்

பாபிலோனிய நியாயத்தீர்ப்பின் போது தோன்றும் மூன்றாவது தீர்க்கதரிசி யோவேல் ஆவார். யோவேல் ஊழியம் செய்த தேதியைப் பற்றி நாம் பிடிவாதமாக இருக்க முடியாது, ஏனென்றால் அவருடைய ஊழியத்திற்கு ஒரு திட்டவட்டமான காலத்தை அவருடைய புத்தகம் நமக்குத் தரவில்லை. சில வியாக்கியான அறிஞர்கள் யோவேலை முந்தைய காலத்தில் வைக்கிறார்கள், மற்றவர்கள் அவரை பிந்தைய காலத்தில் வைக்கிறார்கள். ஆயினும் 1:13 மற்றும் பல குறிப்புகளிலிருந்து, யோவேல் பிரசங்கித்தபடி ஆலயமும் ஆசாரியத்துவமும் செயல்பாட்டில் இருந்தன என்பதை நாம் உறுதியாக நம்பலாம். சீயோனின் அழிவு 2:1 இல் வரும் என்றும் யோவேல் அறிவிக்கிறார். ஆகவே யூதர்கள் பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்ட சமயத்தில் யோவேல் ஊழியம் செய்திருக்கலாம். யூதா தேசம் அந்நிய சேனைகளால் சூறையாடப்படப் போகிறது என்கிற செய்தியை நேரடியாகக் கொடுத்தார். 2-ஆம் அதிகாரத்தில், யோவேல் மனந்திரும்பும்படியும் உள்ளப்பூர்வமான மனந்திரும்புதல் பாபிலோனிய அழிவைத் தடுக்கும் அல்லது மென்மையாக்கும் என்ற நம்பிக்கையையும் அளித்தார். அழிவு வரப்போகிறது என்ற முடிவுக்கு வந்த பிறகும், யோவேல் தேவனுடைய ஆசீர்வாதத்தை முழுமையாக நம்புவதை விட்டுவிடவில்லை. சிறையிருப்பு முடிந்தவுடன், தேவன் தம்முடைய ஜனங்களை மிஞ்ச முடியாத உடன்படிக்கை ஆசீர்வாதத்தின் காலத்திற்கு திரும்ப நிலைநாட்டுவார் என்று அவர் தன் வாசகர்களுக்கு உறுதியளித்தார். யோவேல் 3:20-21ல் அவர் இவ்வாறு கூறுகிறார்:

> “ஆனால் யூதாவோ சதாகாலமாகவும், எருசலேம் தலைமுறை தலைமுறையாகவும் குடியேற்றப்பட்டிருக்கும். நான்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> தண்டியாமல் விட்டிருந்த அவர்களுடைய இரத்தப்பழியைத் தண்டியாமல் விடேன்” கர்த்தர் சீயோனிலே வாசமாயிருக்கிறார்! (யோவேல் 3:20-21).

## ஒபதியா

பாபிலோனிய நியாயத்தீர்ப்பின் போது ஊழியம் செய்த நான்காவது தீர்க்கதரிசி ஒபதியா ஆவார். அவரது புத்தகமும் குறிப்பாக தேதியிடப்படவில்லை, ஆனால் ஏதோம் தேசம் யூதா மக்களின் பயங்கரமான துன்பத்தை எவ்வாறு பயன்படுத்திக் கொண்டது என்பதில் கவனம் செலுத்துகிறது. கி.மு 597 முதல் கி.மு 586 வரையிலான ஆண்டுகளில் யூதாவின் மீது பாபிலோன் ஏற்படுத்திய படையெடுப்புகள் மற்றும் நாடுகடத்தல்களின் போது யூதருக்கு வந்த தொல்லைகளை ஒபதியா மனதில் கொண்டிருந்திருக்கலாம். ஏதோமியரின் கொடுமைகளைக் கர்த்தர் கவனிக்காமல் இருப்பார் என்று ஒபதியா அறிவித்தார். ஏதோம் அழிக்கப்படும் என்றார். சொல்லப்போனால், நாடுகடத்தப்பட்ட யூதர்கள் ஒருநாள் திரும்பி வந்து ஏதோமை கைப்பற்றுவார்கள் என்று அவர் அறிவித்தார். ஒபதியா தனது புத்தகத்தின் 15 வது வசனத்தில் இவ்வாறு கூறுகிறார்:

> எல்லா ஜாதிகளுக்கும் விரோதமான நாளாகிய காத்தருடைய நாள் சமீபமாய் வந்திருக்கிறது; நீ செய்தபடியே உனக்கும் செய்யப்படும்; உன் செய்கையின் பலன் உன் தலையின்மேல் திரும்பும் (ஒபதியா 15).

யூதாவின் சிறையிருப்பு முடிந்த பிறகு, தம்முடைய ஜனங்களை மோசமாக நடத்தியதற்காக தேசங்களை தேவன் தண்டிப்பார் என்று ஒபதியா அறிவித்தார்.

## ஆபகூக்

பாபிலோனிய நியாயத்தீர்ப்பின் போது ஊழியம் செய்த ஐந்தாவது தீர்க்கதரிசி ஆபகூக் ஆவார். அவர் எப்போது ஊழியம் செய்தார் என்பது நமக்குத் துல்லியமாகத் தெரியாது, இருப்பினும் அவரது புத்தகத்தின் உள்ளடக்கம் நமக்கு சில வழிகாட்டுதலைக் கொடுக்கிறது. ஆபகூக் முதல் அதிகாரத்தில், தீர்க்கதரிசி யூதாவில் தேவபக்தியற்ற ஆட்சியாளர்களின் அழிவுக்காக ஜெபிக்கிறார். தேவனுடைய பதில் 1:6 இல் காணப்படுகிறது. அங்கே கர்த்தர் இவ்வாறு சொல்லுகிறார்:

> இதோ, நான் கல்தேயரென்னும் கொடிதும் வேகமுமான ஜாதியாரை எழுப்புவேன்; அவர்கள் தங்களுடையதல்லாத

> வாசஸ்தலங்களைக் கட்டிக்கொள்ள தேசத்தின் விசாலங்களில் நடந்துவருவார்கள் (ஆபகூக் 1:6).

இந்த வேத பகுதியின் வெளிச்சத்தில், கி.மு 605 இல் முதல் பாபிலோனிய படையெடுப்பு மற்றும் நாடுகடத்தலுக்கு சமீபத்தில் ஆபகூக் ஊழியம் செய்திருக்கலாம் என்று தெரிகிறது.

ஆபகூக் முதலில் யூதர்களின் தீமையைப் பற்றி புலம்பினார், பின்னர் அவர் பாபிலோனியர்களின் ஒடுக்குமுறையைப் பற்றி புலம்பினார், ஆனால் தனது புத்தகத்தின் முடிவில், பாபிலோனியர்களை அழிக்க தேவன் எவ்வளவு நேரம் எடுத்தாலும் கர்த்தர் மீதான தனது நம்பிக்கையை உறுதிப்படுத்தினார். 3:17-18 இல், நன்கு அறியப்பட்ட விசுவாச வார்த்தைகளை நாம் வாசிக்கிறோம்:

> அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன் (ஆபகூக் 3:17-18).

## எசேக்கியேல்

பாபிலோனிய காலத்தில் சேவை செய்த ஆறாவது தீர்க்கதரிசி எசேக்கியேல் ஆவார். கி.மு 597 இல் தீர்க்கதரிசி பாபிலோனுக்கு கொண்டு செல்லப்பட்டார் என எசேக்கியேல் அதிகாரம் 1 இரண்டாம் வசனம் கூறுகிறது. நாடுகடத்தப்பட்டவர்கள் மத்தியில் அவர் பாபிலோனில் ஊழியம் செய்தார், இந்த புத்தகத்தின் மற்ற பகுதிகள் தெளிவுபடுத்துகிறபடி, கி.மு 586 இல் எருசலேமின் பெரும் அழிவின் போதும் எசேக்கியேல் ஊழியம் செய்தார். மேலும் கி.மு 586 இல் எருசலேம் அழிக்கப்பட்டது வரை ஊழியம் செய்தார். எசேக்கியேல் தனது ஆரம்பகால ஊழியத்தின் பெரும்பகுதியை பாபிலோனியர்கள் எருசலேமையும் அதன் ஆலயத்தையும் அழிக்கப் போகிறார்கள் என்பதை அறிவிப்பதில் செலவிட்டார். இதற்கும் அப்பால், எசேக்கியேல் புத்தகத்தின் பெரும்பகுதி மக்கள் எவ்வாறு தேசத்திற்குத் திரும்புவார்கள், அவர்கள் திரும்பி வரும்போது ஆலயத்தை எவ்வாறு மீண்டும் கட்ட வேண்டும் என்பதில் கவனம் செலுத்துகிறது. நகரமும் ஆலயமும் எவ்வாறு நம்பமுடியாத அளவிற்கு பிரம்மாண்டமாக இருக்கும் என்பதை விவரித்த பிறகு, அவர் தனது புத்தகத்தை 48:35 இல் இந்த வழியில் முடித்தார்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அந்நாள்முதல் நகரம் யேகோவா ஷம்மா என்னும் பெயர்பெறும் (எசேக்கியேல் 48:35).

## தானியேல்

பாபிலோனிய நியாயத்தீர்ப்பின் போது ஊழியம் செய்த ஏழாவது தீர்க்கதரிசி தானியேல் ஆவார். கி.மு 605 இன் முதல் நாடுகடத்தலில் தானியேல் பாபிலோனுக்கு கொண்டு செல்லப்பட்டார். தானியேலின் ஊழியம் குறைந்தது கி.மு 605 முதல் கி.மு 539 வரை நீடித்தது என்பதை அவருடைய புத்தகத்தில் உள்ள சம்பவங்களைப் பற்றிய குறிப்புகள் தெளிவாக்குகின்றன. தானியேல் சொப்பனங்களுக்கு விளக்கம் கொடுத்தார், தனக்கென பல தரிசனங்களைக் கண்டார், அவை யூதாவின் சிறையிருப்பு நீண்ட காலத்திற்கு நீடிக்கப்போகிறது என்பதை தெளிவுபடுத்தின. தேவனுடைய ஜனங்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பவில்லை என்பதை அவர் உணர்ந்தார், நாடுகடத்தப்பட்டபோது கூட, அவர் 9:13 இல் இவ்வாறு கூறினார்:

> மோசேயின் நியாயப்பிரமாணப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடியே இந்தத் தீங்கெல்லாம் எங்கள்மேல் வந்தது; ஆனாலும் நாங்கள் எங்கள் அக்கிரமங்களை விட்டுத் திரும்புகிறதற்கும், உம்முடைய சத்தியத்தைக் கவனிக்கிறதற்கும், எங்கள் தேவனாகிய கர்த்தரின் முகத்தை நோக்கிக் கெஞ்சினதில்லை (தானியேல் 9:13).

இதன் விளைவாக, தேவனுடைய ஜனங்கள் பாபிலோன், மேதியா மற்றும் பெர்சியா, கிரேக்கம் மற்றும் பெயரிடப்படாத நான்காவது தேசமான ரோம சாம்ராஜ்யம் ஆகியவைகளில் நாடுகடத்தப்படுவார்கள் என்பதை தானியேல் கற்றுக்கொண்டார். நாடுகடத்தப்பட்டவர்களிடம் மனந்திரும்பவும் தேவன் மேல் விசுவாசம் வைக்கவும் தானியேல் கூறினார். தொடர்ந்து கலகம் செய்வது தேசத்திலிருந்து பிரிந்திருப்பதை நீடிக்கவே செய்யும் என்றும் எச்சரித்தார்.

பாபிலோனிய நியாயத்தீர்ப்பை மிகைப்படுத்துவது மிகவும் கடினம். தேவனுடைய ஜனங்கள் படுதோல்வி அடைந்த காலம் அது; தேவனுடைய ஜனங்கள் யூதா தேசத்திலிருந்து நாடுகடத்தப்பட்டார்கள்; தாவீதின் குமாரன் தன் அரியணையிலிருந்து நாடுகடத்தப்பட்டான்; எருசலேம் நகரம் அழிக்கப்பட்டது, தேவனுடைய ஆலயம் கூட அழிக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டில் தேவ மக்களுக்கு நடந்த மிக மோசமான காரியம் இதுதான். இந்த நேரத்தில், தீர்க்கதரிசிகள் எச்சரிக்கை மற்றும் நியாயத்தீர்ப்பின் பல வார்த்தைகளை வழங்கினர், ஆனால் ஒரு நாள் கர்த்தர் தம்முடைய ஜனங்களை எருசலேமுக்கும் யூதாவுக்கும் மீட்டெடுப்பார் என்ற நம்பிக்கையையும் வழங்கினர்.

தீர்க்கதரிசிகளின் வரலாற்று பகுப்பாய்வு பற்றிய இந்த பாடத்தில் இதுவரை மூன்று காலகட்டங்களில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகளையும் தீர்க்கதரிசன ஊழியங்களையும் பார்த்தோம். இப்போது நாம் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தின் கடைசி காலப்பகுதியான மறுசீரமைப்பு காலத்திற்கு வருகிறோம்.

# மறுசீரமைப்பு காலம்

நாம் பார்த்தபடி, ஆரம்பகால அரசாட்சி வேதத்தின் எழுதிய தீர்க்கதரிசிகளுக்கு பின்னணியை வழங்கியது. அசீரிய நியாயத்தீர்ப்பின்போது அநேக தீர்க்கதரிசிகள் ஊழியம் செய்தார்கள், பாபிலோனிய நியாயத்தீர்ப்பின்போது இன்னும் அதிகமானவர்கள் தேவனுக்கு சேவை செய்தார்கள். இப்போது நாம் பாபிலோனில் சிறையிருப்பிலிருந்து யூதா தேசத்திற்கு திரும்பி வந்தபோது தேவனுடைய மக்களுக்கு ஊழியம் செய்த தீர்க்கதரிசிகளை ஆராய வேண்டும். கி.மு. 539 முதல் கி.மு 400 வரை நீடித்த இந்த மறுசீரமைப்பு காலம் பற்றி நாம் பேசலாம். முதலில் அந்தக் காலத்தின் முக்கிய நிகழ்வுகளிலும் பின்னர் தீர்க்கதரிசன ஊழியங்களிலும் கவனம் செலுத்துவதன் மூலம் இந்த காலப்பகுதியை நமது வழக்கமான வழியில் ஆராய்வோம். மறுசீரமைப்பு காலத்தின் முக்கிய நிகழ்வுகளை முதலில் பார்ப்போம்.

## முக்கிய நிகழ்வுகள்

இஸ்ரவேல் மக்கள் தேசத்திற்குத் திரும்பியதைப் பற்றி நாம் முதலில் குறிப்பிட வேண்டும்.

### இஸ்ரவேல் மக்கள் தேசத்திற்குத் திரும்புதல்

கி.மு 539 மற்றும் கி.மு 538 இல், நாடுகடத்தப்பட்ட மக்களுக்கு தேவன் ஒரு அற்புதமான காரியத்தைச் செய்தார். ஏசாயாவில் உள்ள தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாக, பெர்சிய பேரரசரான கோரேசு பாபிலோனிய சாம்ராஜ்யத்தை வென்று, இஸ்ரவேலரை தங்கள் தேசத்திற்குத் திரும்பி யெகோவாவின் ஆலயத்தைத் திரும்பக் கட்டும்படி ஊக்குவித்தார். நாடுகடத்தப்பட்ட மக்களின் இந்த ஆரம்ப மறுசீரமைப்பு ஷெஷ்பத்சாரின் தலைமையின் கீழ் நடந்தது, அது தாவீதின் சிங்காசனத்தின் சரியான வாரிசான செருபாபேல் என்று பலர் நினைக்கிறார்கள். இருப்பினும், நாடுகடத்தப்பட்டவர்கள் ஒப்பீட்டளவில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எண்ணிக்கையில் குறைவாகவே இருந்தனர், மேலும் அவர்கள் யெகோவாவின் சித்தத்தை செய்வதில் உறுதியாக அர்ப்பணித்திருக்கவில்லை.

### ஆலய புனரமைப்பு

இந்த உண்மையானது மறுசீரமைப்பு காலத்தின் இரண்டாவது பெரிய நிகழ்வுக்கு நம்மை கொண்டு வருகிறது, கி.மு 520 முதல் 515 வரை ஆலயம் மீண்டும் கட்டப்பட்டது. முதலில் தேசத்திற்குத் திரும்பிய இஸ்ரவேலர்கள் ஆலயத்தைத் திரும்பக் கட்டுவதை புறக்கணித்தனர். அவர்கள் திட்டத்தைத் தொடங்கினர், ஆனால் விரைவில் தங்கள் சொந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஈடுபட்டு கட்டுவதை நிறுத்தினர். ஆலயத்தை திரும்ப கட்டும் பொறுப்பில் தேவ மக்கள் தவறியதால், தீர்க்கதரிசிகளான ஆகாய் மற்றும் சகரியா ஆகியோர் கி.மு 520 இல் எருசலேமின் வீதிகளில் இறங்கி தேவனுடைய ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்ப மக்களுக்கு அறிவுறுத்தினர். முதலில் பெரும் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் இருந்தது, ஆனால் அந்த நம்பிக்கை நீண்ட காலம் நீடிக்கவில்லை.

### பரவலான விசுவாச துரோகம்

மறுசீரமைப்பு காலப்பகுதியின் மூன்றாவது பெரிய நிகழ்வு பரவலான விசுவாசதுரோகம் ஆகும். இந்த விசுவாசதுரோகம் ஆலயத்தின் ஆரம்ப புதுப்பித்தலுக்குப் பிறகு, குறிப்பாக எஸ்றா மற்றும் நெகேமியாவின் ஊழியங்களின் போது வளர்ந்தது. இந்த காலகட்டத்தின் துல்லியமான தேதிகளை அறிஞர்கள் விவாதிக்கிறார்கள், எனவே நாம் கி.மு 450 முதல் 400 வரை சாத்தியக்கூறுகளின் வரம்பை அமைக்க வேண்டும். செருபாபேல் ஆலயத்தை மீண்டும் கட்டிய ஒரு தலைமுறைக்குள், தேவனுடைய ஜனங்கள் அந்நிய பெண்களுடன் கலப்பு மணம் செய்யத் தொடங்கினர், இதன் விளைவாக, இஸ்ரவேலின் மதம் மற்ற மக்களின் மதங்களுடன் கலந்தது. மறுசீரமைப்பு காலம் நிறுத்தப்பட்டது. எஸ்றா மற்றும் நெகேமியாவிடம் சில சீர்திருத்தங்கள் இருந்தன, அவர்கள் சிறிது காலம் வேலை செய்தனர், ஆனால் அந்த சீர்திருத்தங்கள் குறுகிய காலத்திலேயே தோல்வியடைந்து விட்டன. மறுசீரமைப்பு காலம் பெரும் விசுவாசதுரோகத்தின் காலமாக மாறியது.

மறுசீரமைப்புக் காலத்தைப் பற்றிய நமது இரண்டாவது அக்கறைக்கு இப்போது திரும்புவோம். இந்த நேரத்தில் ஊழியம் செய்த தீர்க்கதரிசிகளை இந்த நிகழ்வுகள் எவ்வாறு பாதித்தன?

## தீர்க்கதரிசன ஊழியங்கள்

ஆகாய், சகரியா, மல்கியா ஆகிய மூன்று பிரபலமான தீர்க்கதரிசிகள் இருந்தனர். முதலில் ஆகாயின் ஊழியத்தைப் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## ஆகாய்

இந்த தீர்க்கதரிசி தேசத்திற்குத் திரும்பி வந்தவர்களில் ஒருவர் என்பதை ஆகாய் புத்தகம் மிகவும் தெளிவாகக் காட்டுகிறது. இதன் விளைவாக, அவருடைய ஊழியம் எருசலேமில் நடந்தது. இதைத் தாண்டி, ஆகாய் எப்போது ஊழியம் செய்தார் என்பதை நாம் துல்லியமாக அறிவோம். யூதாவின் ஆளுநரான செருபாபேலிடம் ஆறாம் மாதம் முதல் நாளில் தேவன் ஆகாய் மூலம் பேசினார் என்று ஆகாய் 1:1 இல் வாசிக்கிறோம். இதிலிருந்தும், ஆகாய் புத்தகத்திலுள்ள மற்ற பகுதிகளிலிருந்தும், ஆகாய் தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் கி.மு 520 இல் நான்கு மாத காலப்பகுதியில் கொடுக்கப்பட்டன என அறிகிறோம்.

இப்போது ஆகாய் சொன்ன அடிப்படை செய்தி என்ன? ஆலயத்தைத் திரும்பக் கட்டும்படி தடுமாறிக் கொண்டிருந்த யூத மக்களை உற்சாகப்படுத்த ஆகாய் தீர்மானித்தார். சொல்லப்போனால், செருபாபேலும் ஜனங்களும் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பினால் அவருக்கு பெரிய வெற்றிகளும் ஆசீர்வாதங்களும் கிடைக்கும் என்று ஆகாய் முன்னறிவித்தார். 2:21 இல் அவர் இவ்வாறு கூறுகிறார்:

> நீ யூதாவின் தலைவனாகிய செருபாபேலோடே சொல்லவேண்டியது என்னவென்றால், நான் வானத்தையும் பூமியையும் அசையப்பண்ணுவேன் (ஆகாய் 2:21).

தேசம் உண்மையாக கர்த்தரிடம் திரும்பி, அவருடைய ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்பினால், ஆகாய் ஜனங்களுக்கு தேவனுடைய நிறைவான ஆசீர்வாதங்களை வழங்குவதாக சொன்னார்.

## சகரியா

மறுசீரமைப்பு காலத்தின் இரண்டாவது தீர்க்கதரிசி சகரியா ஆவார். சகரியா தீர்க்கதரிசனங்களின் பொருளடக்கத்திலிருந்து அவர் எருசலேமில் ஆகாயுடன் ஒன்றாக ஊழியம் செய்தார் என அறிகிறோம். அத்தியாயம் 1 வசனம் 1 தரியு அரசாண்ட இரண்டாம் ஆண்டின் எட்டாவது மாதத்தில் ஆகாய் ஊழியம் செய்யத் தொடங்கினார் என்று குறிப்பிடுகிறது, வேறு வார்த்தைகளில் கூறுவதானால், கி.மு 520 ஆம் ஆண்டில் அவர் ஊழியத்தை தொடங்கினார். சகரியா புத்தகத்தின் 9-14 அதிகாரங்களின் உள்ளடக்கத்திலிருந்து, தெய்வீக ஆசீர்வாதத்தைக் கொண்டுவர ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்புவது மட்டும் போதாது என்பது தெளிவாகத் தெரிந்த பிறகும் சகரியா ஊழியம் தொடர்ந்தது என்று பல வியாக்கியான அறிஞர்கள் நம்புகிறார்கள். சகரியா புத்தகத்தின் முதல் எட்டு அதிகாரங்களில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ள அவரது ஆரம்பகால ஊழியத்தில் ”மக்கள் ஆலயத்தை மீண்டும் கட்டினால் பெரிய ஆசீர்வாதங்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வரும்” என்கிற தீர்க்கதரிசியின் செய்தி மிகவும் எளிமையானது. இருப்பினும், இதற்கு அப்பால், 9-14 அதிகாரங்களில், சகரியா ஒரு பேரழிவுள்ள, எதிர்கால, தெய்வீக தலையீட்டால் மட்டுமே முழு மறுசீரமைப்பு வரும் என்று முன்னறிவித்தார். எதிர்காலத்தில் தேவன் தலையிட்டு தம்முடைய ஜனங்களுக்கு வெற்றியையும் நீதியையும் கொண்டு வரப்போகும் ஒரு பெரிய தொடர் நிகழ்வுகளின் தரிசனங்களை தீர்க்கதரிசி கொண்டிருந்தார். 14:20 இல் அவர் கூறியது போல்:

> அந்நாளிலே குதிரைகளின் மணிகளிலே கர்த்தருக்குப் பரிசுத்தம் என்னும் விலாசம் எழுதியிருக்கும்; கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பானைகள் பலிபீடத்துக்கு முன்பாக இருக்கிற பாத்திரங்களைப் போலிருக்கும் (சகரியா 14:20).

## மல்கியா

பழைய ஏற்பாட்டின் கடைசி தீர்க்கதரிசி மல்கியா ஆவார். ஆலயம் மற்றும் லேவியர்களில் அவர் கவனம் செலுத்தியதிலிருந்து, மல்கியாவும் எருசலேமுக்கு அருகிலும் ஊழியம் செய்தார் என்பது தெளிவாகிறது. கி.மு.450-க்கும் 400-க்கும் இடைப்பட்ட காலத்தில், நெகேமியாவின் சீர்திருத்த காலத்திலோ அதற்குப் பின்னரோ அவருடைய செய்தி மிகவும் பொருந்துகிறது. ஆலய சேவைகள் மிகவும் சீர்கெட்டுப்போயிருந்தன, ஜனங்கள் கர்த்தரிடமிருந்து வெகு தூரம் விலகிவிட்டதால், தேவனுடைய மக்களுக்கு எதிராக ஒரு பெரிய நியாயத்தீர்ப்பு வரப்போகிறது என்று மல்கியா அறிவித்தார். மத்தேயு 3:5 இல் நாம் வாசிக்கிறோம்:

> [கர்த்தர்] நியாயத்தீர்ப்பு செய்யும்படி உங்களிடத்தில் வருவேன் (மல்கியா 3:5).

ஆயினும் எதிர்காலத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேலில் நீதிமான்கள் இறுதியாக திரும்ப நிலைநாட்டப்படுவதற்கும் வழிவகுக்கும் என்பதை மல்கியா அறிந்திருந்தார். 4:2 இல், மனந்திரும்பி கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக நிரூபிப்பவர்களுக்கு மல்கியா நம்பிக்கையை அளிக்கிறது.

> ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும். அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள் (மல்கியா 4:2).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நியாயத்தீர்ப்புக்குப் பிறகு மிகுந்த ஆசீர்வாதத்தின் காலம் வரும் என்று மல்கியா இஸ்ரவேலுக்கு அதனுடைய விசுவாசதுரோகத்தின் போதும் உறுதியளித்தார்.

மறுசீரமைப்பு காலத்தின் தீர்க்கதரிசிகள் ஒரு பெரிய நெருக்கடியை சமாளிக்க வேண்டியிருந்தது. நாடுகடத்தலிலிருந்து திரும்பி வந்த தேவனுடைய மக்கள் தொடர்ந்து தேவனுக்கு எதிராக கலகம் செய்தனர், இதன் விளைவாக, தீர்க்கதரிசிகள் இறுதியாக பெரிய மறுசீரமைப்பு ஆசீர்வாதங்கள் தொலைதூர எதிர்காலத்தில் மட்டுமே வரும் என்று முடிவு செய்தனர். இப்போது, கிறிஸ்தவர்களாக, இந்த தொலைதூர எதிர்காலம் இயேசு பூமிக்கு வந்தபோது வந்தது என்பதை நாம் அறிவோம்.

# முடிவுரை

இந்த பாடத்தில் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் வரலாற்று பகுப்பாய்வை நாம் ஆராய்ந்தோம். வரலாறு மிகவும் சிக்கலானது என்றாலும், தீர்க்கதரிசன வரலாற்றின் நிகழ்வுகளை நான்கு முக்கிய காலகட்டங்களின் அடிப்படையில் சுருக்கமாகக் கூறுவது உதவியாக இருக்கும்: முதலாவது, ஆரம்பகால அரசாட்சி; இரண்டாவது, அசீரிய நியாயத்தீர்ப்பு; மூன்றாவதாக, பாபிலோனிய நியாயத்தீர்ப்பு; நான்காவது, நாடுகடத்தலுக்குப் பிந்தைய காலம். இந்த காலத்தில் அதிக ஆரம்ப நம்பிக்கைகள் இருந்த நேரம், ஆனால் இறுதியில் நம்பிக்கைகள் தேவனிடமிருந்து தொலைதூர ஆசீர்வாதத்தைத் தொடர்ந்து மேலும் நியாயத்தீர்ப்பின் எதிர்பார்ப்புக்கு வழிவகுத்தன.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தை விளக்க நாம் கற்றுக்கொள்ளும்போது, அவைகளின் வார்த்தைகளை அவைகளின் சூழ்நிலைகளுடன் தொடர்புபடுத்துவது எப்போதும் அவசியமாகும். தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை அவர்கள் எதிர்கொண்ட வரலாற்று சூழ்நிலைகளுடன் நாம் தொடர்புபடுத்தும்போது, அந்த நாட்களின் மக்களுக்கு அவர்களின் வார்த்தைகள் என்ன அர்த்தம் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும், மேலும் அவர்களின் வார்த்தைகள் இன்று நமக்கு என்ன அர்த்தம் என்பதையும் நாம் புரிந்து கொள்ள முடியும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.